மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.04/2024
அ.வ.எண்.06/2023

1. சந்திரா
2. ராஜேஷ் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

தனசேகரன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 18.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிவபிரகாசம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ஸ்டாலின்ராஜா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151ன் கீழ் கடந்த 27.07.2023ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய அனுமதித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

### 1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் :–

எதிர்மனுதாரர்/வாதி விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டு, அன்றைய தினம் மனுதாரர்களை அழைத்தபோது மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 27.07.2023ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக

ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி காலக்கட்டத்தில் 1ம் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, சிகிச்சையில் இருந்துவந்ததால் வழக்கறிஞரை சந்தித்து தகவல் கொடுக்க முடியாமலும், நேரில் ஆஜராக முடியாமலும் போய்விட்டது. தற்போது வழக்கறிஞரை சந்தித்தபோது மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவான விவரம் தெரிய வந்தது. வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல வாதம் உள்ளது. எனவே கடந்த 27.07.2023ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய அனுமதித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய், உண்மைக்கு புறம்பானது. சட்டப்படியும், நியாயப்படியும் தள்ளுபடி செய்யத்தக்கது. மேற்படி மனுவில் கடந்த 27.07.2023ம் தேதியன்று மனுதாரர்களை அழைத்தபோது ஆஜராகவில்லை என்றும், அந்த காலக்கட்டத்தில் 1ம் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, சிகிச்சையில் இருந்துவந்ததாகவும், அதனால் வழக்கறிஞரை சந்தித்து தகவல் கொடுக்க முடியாமல் போய்விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். 1ம் மனுதாரரே தனக்கு மட்டும் வைரஸ் காய்ச்சல் என்று குறிப்பிட்டுள்ளார். அவ்வாறிருக்கையில் 2ம் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கலாம். அதனைத் தொடர்ந்து அசல் தாவாவில் எதிருரை மற்றும் பதிலுரைக்கான சங்கதிகளை அவரது வழக்கறிஞரிடம் எடுத்துரைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கலாம்.

(ii) மேற்படி மனுதாரர்களுக்கு அசல் தாவாவில் இ.ம.எண்.02/2023 என்ற மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அவர் தாவா சொத்தை அளவீடு செய்வது குறித்து 28.10.2023ம் தேதியில் தாவா சொத்திற்கு வரப்போவதாக மனுதாரர்களுக்கு 12.10.2023ம் தேதியிலேயே அறிவிப்பு அனுப்பியிருந்தார். அதன்பின்னிட்டு 28.10.2023ம் தேதியன்று ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும்போது உபயமனுதாரர்கள் உடனிருந்து ஆணையாளருக்கு உதவி செய்தனர். அதேபோல்

அன்றைய தேதியிலேயே நீதிமன்ற ஆணையருக்கு குறிப்பாணை ஒன்றினையும் கொடுத்துள்ளனர். மேற்படி நிகழ்வுகள் அனைத்தும் மனுதாரர்களின் வழக்கறிஞரின் அறிவுரைப்படி மனுதாரர்கள் நடந்து கொண்டனர்.

(iii) மனுதாரர்களுக்கு நீதிமன்ற ஆணையர் 12.10.2023ம் தேதியிலேயே அறிவிப்பு அனுப்பிய தேதியிலேயே ஒருதலைப்பட்ச உத்தரவு குறித்து நன்கு தெரிந்து கொண்டு, சுமார் 4 மாதங்கள் கழித்து தற்போது தான் தெரிய வந்தது என கூறுவது உண்மைக்கு புறம்பான சங்கதியாகும். உண்மைகளை மறைத்து கறைபடிந்த கரங்களுடன் தாக்கல் செய்துள்ள இம்மனு எவ்விதத்திலும் நிலைக்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டு, அன்றைய தினம் மனுதாரர்களை அழைத்தபோது மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 27.07.2023ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேற்படி காலக்கட்டத்தில் 1ம் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, சிகிச்சையில் இருந்துவந்ததால் வழக்கறிஞரை சந்தித்து தகவல் கொடுக்க முடியாமலும், நேரில் ஆஜராக முடியாமலும் போய்விட்டது என்றும், தற்போது வழக்கறிஞரை சந்தித்தபோது மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவான விவரம் தெரிய வந்தது என்றும், மேற்கண்ட வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல வாதம் உள்ளது என்றும், எனவே கடந்த 27.07.2023ம் தேதியில் மனுதாரர்களுக்கு எதிராக

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய அனுமதித்து உத்தரவிடக் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் மனுதாரரே தனக்கு மட்டும் வைரஸ் காய்ச்சல் என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், அவ்வாறிருக்கையில் 2ம் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கலாம் என்றும், அதனைத் தொடர்ந்து அசல் தாவாவில் எதிருரை மற்றும் பதிலுரைக்கான சங்கதிகளை அவரது வழக்கறிஞரிடம் எடுத்துரைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கலாம் என்றும், மனுதாரர்களுக்கு நீதிமன்ற ஆணையர் 12.10.2023ம் தேதியிலேயே அறிவிப்பு அனுப்பிய தேதியிலேயே ஒருதலைப்பட்ச உத்தரவு குறித்து நன்கு தெரிந்து கொண்டு, சுமார் 4 மாதங்கள் கழித்து தற்போது தான் தெரிய வந்தது என கூறுவது உண்மைக்கு புறம்பான சங்கதி என்றும், உண்மைகளை மறைத்து கறைபடிந்த கரங்களுடன் தாக்கல் செய்துள்ள இம்மனு எவ்விதத்திலும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரர்/வாதி விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு கோப்பை பரிசீலனை செய்கையில், பதிலுரை தாக்கல் செய்வதற்காக வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில், மனுதாரர்கள் ஆஜராகாததால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 27.07.2023ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியவருகிறது. மேற்படி தேதியில் தனக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதால் தன்னால் நீதிமன்றத்தில் ஆஜராகி பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என மனுதாரர்கள் கூறும் காரணம் ஏற்கத்தக்க வகையில் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(iv) அதே சமயத்தில் தனக்கெதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு குறித்து மனுதாரருக்கு கடந்த 12.10.2023ம் தேதியிலேயே நீதிமன்ற ஆணையர் அறிவிப்பின் மூலமாக தெரிந்துள்ளது தெளிவாகிறது. இருப்பினும் மனுதாரர்களால் மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய சுமார் 4 மாதங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதும்

தெளிவாகிறது. ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் காலவரையறைச் சட்டம் பொருந்தாது எனினும், தனக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு குறித்து தெரிந்து கொண்டும் மனுதாரர்கள் உடனடியாக மனுதாக்கல் செய்யாமல் சுமார் 4 மாதங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால், மனுதாரர்கள் இவ்வழக்கு விசாரணையில் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்தியுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) இருப்பினும் இவ்வழக்கானது விளம்புகை, செயலுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான வழக்கு என்பதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் மனுதாரர்கள் தங்களது எதிர்வாதத்தை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கவேண்டும் என்ற அடிப்படையிலும், தரப்பினரிடையே உள்ள பிரச்சனை இறுதியாக இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதாலும், இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vi) இருப்பினும் மனுதாரர்கள் இம்மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொள்கையிலும், வழக்கு நடவடிக்கைகளில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலதாமதத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.2000/—ஐ செலவுத் தொகையாக அளிக்கும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு ரூ.2000/—செலவுத்தொகையாக 09.08.2024 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 09.08.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம்

ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.08.02 18:27:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.08.02 18:27:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.